**செய்தி வெளியீடு எண்.620** **நாள்.31.7.2008**

## திருமணமாகாமல் 50 வயது கடந்து வாழும் ஏழை மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுவதைப்போல, குடும்பத்தில் வசதிவாய்ப்புகளின்றித் திருமணம் ஆகாமலேயே தனித்து வாழ்ந்து 50 வயது அடைந்த நிலையில், உழைத்து சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத வறுமைச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை எளிய மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படும் என சென்னையில் கடந்த 20.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பினையொட்டி 1.7.2008 அன்று அரசாணை பிறப்பிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குடும்பத்தில் வாய்ப்பு வசதி அற்ற நிலையில் திருமணமாகாமலேயே 50 வயதடைந்து, உழைத்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழை மகளிரின் விவரங்கள் மாவட்ட ஆட்சியர்களால் தொகுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இதுவரை 9 ஆயிரத்து 100 ஏழை மகளிர் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுவதன் அடையாளமாக 15 ஏழை மகளிர்க்கு தமிழக அரசின் இந்தப் புதிய திட்டத்தின்கீழ் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித்தொகைகளை அளிப்பதற்கான ஆணைகளையும், 2008 ஜுலை மாத உதவித் தொகைக்குரிய காசோலைகளையும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் இன்று (31.7.2008) வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆணைகளையும் உதவித் தொகைகளையும் பெற்ற 15 பெண்களின் விவரம் பின்வருமாறு :–

சென்னை மாநகர் புளியந்தோப்பு ஆ.ராணி, மு.சுகுணா, சாந்தோம் ச.லீமாரோஸ், மந்தைவெளிப்பாக்கம் கா. தவுலத்பேகம், பழைய வண்ணாரப் பேட்டை அ.மெகருன்னிசா

திருவள்ளூர் மாவட்டம் தொழுவூர்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த அ.தாட்சாயணி, பா.செல்லம்மாள், பொ.தனம்மாள், சொராஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த கி.பிரேமா, ஆவடியைச் சேர்ந்த ர.லலிதா,

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு கிராமத்தைச் சேர்ந்த பொ.சகுந்தலா, நாகர்கோவில் செ.உமையம்மாள், ஏ.வசந்தா, பூதப்பாண்டியைச் சேர்ந்த சா. அழகம்மை, பூ. சிதம்பரவடிவு ஆகியோராவர்.

இந்நிகழ்வின்போது மத்திய அமைச்சர் திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், தமிழக மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, சமூகநலத் துறை முதன்மைச் செயலாளர் திரு.என்.எஸ்.பழனியப்பன், இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலாளர் திரு.அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் திரு.சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., சமூகநலத் துறை ஆணையர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., வருவாய் நிர்வாகக் கூடுதல் ஆணையர் திரு.து.இராஜேந்திரன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.